# கி.ராஜநாரயணன் கதைகளில் உறவுத்தாக்கம்

**மு. பாலகணேஷ்**

உதவிப் பேராசிரியர், தமிழியல் துறை, ஸ்ரீ காளீஸ்வரி கல்லூரி(தன்னாட்சி), சிவகாசி

Open Access

Manuscript ID:
BIJ-SPL3-JAN26-MD-073

Subject: Tamil

Received : 29.07.2025
Accepted : 12.01.2026
Published : 31.01.2026

DOI: 10.64938/bijsi.v10si3.26.Jan073

Copy Right:

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License.

**ஆய்வுச்சுருக்கம்**

*மனிதனின் இன்ப – துன்பநிலைகளுக்கு அடிப்படை உறவுகளும் குடும்ப அமைப்புகளும் இவற்றுள் குடும்பம் என்ற அமைப்பில் கணவன், மனைவி, குழந்தைகள், அடக்கம் அவ்வாறே சிலஉறவுகளும் அடங்குகிறது. கி.ராவின் கதைகளில் உள்ள உறவுமுறைத் தாக்கத்தினை எளிமையாக ஒரு சில கதைகளில் காணமுடிகிறது. குடும்ப அமைப்பில் கணவன் - மனைவி உறவு, மாமியார் - மருமகள் உறவு, தாய் - மகன் உறவு என தனித்தனியாக பகுத்து பார்க்கும் நிலையில் கி.ராவின் கதைகள் இருக்கின்றன. பல்வேறு உணர்வுகள் அடங்கிய வாழ்வில் இன்பமும் துன்பமும் கலந்து கடந்து செல்ல ஒவ்வொரு உறவுமுறைகளும் அவசியம். பெண்களின் பெருமையைப் பேசும் தாய் - மகன் உறவு அதாவது தாய்மைப் பண்பு அவற்றால் பெரும் உறவு. இத்தகைய உறவிற்கு வலிமை அதிகம் என கி.ரா தனது கதைகளில் வெளிப்படுத்துகிறார். அதனைத் தொடர்ந்து தந்தை – மகள் உறவு தாயை விட பெண் குழந்தைகள் பெரிதும் விரும்புவது தன் தந்தையை பெற்றவள் தாய் என்றாள். வளர்த்தவர் தந்தை இத்திறத்தை ஆண்குழந்தைகள் சில இடங்களில் மறுக்கின்றனர். வெறுக்கின்றனர். ஆனால் பெண்குழந்தைகள் தன் தந்தைக்கு தான் பாசத்தில் முதல்இடம் என வாழ்கின்றனர். அதனையும் சிறுகதைவழி அறியமுடிகிறது. அண்ணன் - தம்பி உறவு பத்து வயதிற்கு மேல் பங்காளி மட்டுமே என்ற நிலையில் இவ்உறவுகள் படைக்கப்பட்டுள்ளது. இவ்வாறாக கி.ராவின் கதைகளில் ஒவ்வொரு உறவும் வெவ்வேறான நிலையில் இயங்குகிறது. இவற்றை எல்லாம் கடந்து ஊருக்காக என ஒரு சில உறவுகள் இருக்கின்றன என்பதையும் மாறுபட்ட உறவுகளாக அறியமுடிகிறது. இவற்றையெல்லாம் மையமாகக் கொண்டு கி.ராஜநாராயணன் கதைகளில் உறவுத் தாக்கம் இடம்பெறும் நிலைகளை காணலாம்.*

**திறவுச்சொல்: கணவன் - மனைவி உறவுமுறை, இன்பதுன்பத்திலும் இணைந்த வாழ்வு, குடும்பம் என்னும் அமைப்பு, கோபத்தினால் கேள்விக்குறியான வாழ்க்கை, புதிய உறவின்வழி இழந்த உறவு இணைதல், தாய் - மகன் உறவு, பெண்குழந்தை தந்தை மீது பாசம், மாறுபட்ட உறவு.**

மனிதன் தன்சுயக் கட்டுப்பாடு கொண்ட வாழ்வியல் முறையில் இன்ப-துன்ப நிலைகளைப் பெறக் குடும்பம் என்ற அமைப்பு உள்ளது. ஒரு ஆண் ஒரு பெண்ணோடும், ஒரு பெண் ஒரு ஆணோடும் உறவு கொள்ள ஏற்படுத்தும் உறவுமுறை கணவன் - மனைவி என்ற தனிப்பட்ட அமைப்பாகும். இதற்குப் பெயர் குடும்பம் என்ற பிணைப்பாகும். குடும்ப அமைப்பில் இணைந்து பல உறவுமுறைகளை பெறுவதற்கு காரணியாக இருப்பது திருமணம் என்பதாகும்.

> **மணஉறவு என்பது மணமகன், மணமகள் ஆகிய இரண்டு தனிமனிதர்களைத் தாண்டி அவர்களின் குடும்பத்தினர் அவர்கள் சார்ந்த உறவினர் ஆகியோரை இணைத்துக் கொள்ளும் பொருளியல் பிணைப்பு சார்ந்த கட்டமைப்பு**

(கு.வெ.பாலசுப்ரமணியன், 1990: 47) என கு. வெ.பாலசுப்ரமணியன் குடும்ப உறவுமுறைக் குறித்துக் கூறியுள்ளார்.

உலகில் வாழும் அனைத்து மனிதர்களுக்கும் தாய் - பிள்ளை, தந்தை – மகன், கணவன் - மனைவி, காதலன் - காதலி, தந்தை – மகள், மாமியார் – மருமகள் எனப் பல்வேறு உறவுமுறைகள் உள்ளன. இவற்றுள் பெண்கள் தன் குடும்ப வாழ்வில் தன்னை ஈடுபடுத்திக் கொள்வதன் மூலம் மனைவி, தாய், மகள், அக்கா, தங்கை, மருமகள் எனப் பலஉறவு நிலைகளை அடைகின்றனர். இதனைப் போன்று ஆண்களும் தந்தை, மகன், அண்ணன், தம்பி, மருமகன், கணவன் எனும் உறவு வடிவங்களை ஏற்கின்றனர். இவை அனைத்தும் கி.ரா கதைகளில் வெளிப்படையாகவே அமைந்துள்ளன.

## கணவன் - மனைவி உறவு

கணவன் மனைவி உறவுமுறையை உருவாக்குவது திருமணமாகும். இத்திருமணத்தின் வழியாகக் குடும்பம் என்னும் அமைப்பு உருவாகிறது. இல்வாழ்க்கைத் தொடக்கம் திருமணம் எனும் நிகழ்வால் அமைகிறது. இதனை “ஓர் இவள்” என்னும் சிறுகதை உணர்த்துகிறது.

திருமணம் என்ற பிணைப்பால் ஏற்படக்கூடிய கணவன் - மனைவி உறவு ஆரம்பத்தில் மகிழ்வைத் தரும் என்பதை

**கலியாணமான புதுசில் மாமனார் வீட்டில் மூனுமாச விருந்தின் போது... அடடா... சொர்க்கத்துக்கு மூணுமாசம் தான் லிமிட் போலிருக்கிறது.**

***(கி.ராஜநாராயணன், 2008: 429)***

எனும் கதை நிகழ்வின் வழி திருமணம் நிகழ்ந்த ஆரம்பகால வாழ்வியலை அறியமுடிகிறது. மூன்றுமாதமும் விருந்திற்காகப் பொழுதைக் கழிப்பதை இக்கதைவரிகள் விளக்கு நிற்கின்றன.

கணவனும் மனைவியும் ஒருவரை மற்றவர் அறிந்து புரிந்து உதவியாக வாழ இல்வாழ்க்கை வழி செய்கின்றது. அதனை உணர்ந்து வாழ்தல் அவசியம் என்பதை,

**தாங்க முடியாத வேலைப்பழுவின் போது அவளுக்குக் கொண்டையா வந்து உதவுவான் அவள் அதை வேண்டாம் என்று தடுப்பதில்லை விரும்பி ஏற்றுக் கொள்வதும் இல்லை. அவளுடைய சரமும் ஊடலும் பல வண்ணங்களில் தொடராக நீளுகின்றன. பல கோணங்களிலும் பலவிதங்களிலும் அவர்கள் ஒருவரை மற்றவர் அறிந்து கொள்ள இந்த காலம் உதவியது.**

***(கி.ராஜநாராயணன்,2008: 225)***

என்னும் கதைப் பதிவு விளக்குகிறது. "கனிவு" என்ற கதையின் வழி கரிசல் மக்களிடையே கணவன் - மனைவி உறவு நிலை இருந்த திறத்தைத் தெளிவாக அறியமுடிகிறது. பகலும், இரவும் பாராமல் தன் குடும்பத்திற்காகப் பாடுபட்ட நிலையும் இன்பத்திலும் துன்பத்திலும் இணைந்த வாழ்வியலையும் அறியலாம். இதனை

**அவர்கள் முன்பு போல் பேசக் கூச்சப்படுவதில்லை. நிறை பிடித்துப் போட்டிப் போட்டுக் கொண்டு களை செதுக்கினார்கள். வியர்வையால் குளித்தது போல் தெப்பமாக நனைந்தார்கள்.**

***(கி.ராஜநாராயணன், 2008: 225)***

எனும் கதைச்சான்று சுட்டுகின்றது, தங்களது நிலத்தில் தாங்களாகவே பாடுபடுகின்றனர். கணவன் மனைவி இருவர் மட்டுமே தங்களுடைய வேலைகளைப் பகிர்ந்து செய்கின்றனர். மேலும் மனைவி மதிய உணவிற்குக் கணவனுக்கும் சேர்த்து கஞ்சி கலயத்தை சுமந்து வருகிறாள் என்பதைக் கதைப் பதிவு விளக்குகிறது. கரிசல் கதைகளில் பெரும்பாலான கதைகள் விவசாயக் குடும்பத்தைச் சார்ந்த கதைகளாக அமைந்துள்ளன.இக்கதைகள் எதிலும் இப்பெண்கள் வேலையில்லாமலோ, கணவனுக்கு உதவாமலோ அல்லது கணவனோடு சண்டையிட்டு பிரிந்து வாழவோ இல்லை. கணவனுக்கு உதவியாகக் கணவனோடு அன்பாக வாழ்ந்தனர் என்பதைக் கதைகள் புலப்படுத்துகின்றன.

***மாமியார் – மருமகள் உறவுமுறை***

திருமணம் எனும் நிகழ்வின் வழி குடும்பம் என்னும் அமைப்பு தோன்றுகிறது. இருப்பினும் இந்தக் குடும்பத்திற்குள் உள்ள உறவுகளின் வழி வாழ்வியல் தன்மை வெளிப்படுகிறது. மாமியார் மருமகள் உறவுநிலைத் தன்மையில் மாமியார் மருமகளை ஏற்க வேண்டும்,அதேபோல் மருமகளும் மாமியாரை ஏற்க வேண்டும் என்பதாகும். ஆனால் இது எல்லா மக்களிடமும் இல்லை. இவர்களால் குடும்பம் இரண்டாகப் பிரிந்து காணப்படுகிறது. இது புரிதல் இல்லாத தன்மையின் வெளிப்பாடாகும். இதனை உணர்த்தும் விதமாக "கீரியும் பாம்பும்" எனும் சிறுகதை அமைந்துள்ளது. மாமியார் மருமகள் எனும் உறவுமுறை வெளிப்பாட்டை லோகா – தனம் ஆகிய கதை மாந்தர்களின் வழி அறியமுடிகிறது.

பல்வேறு உணர்ச்சிகள் கலந்த வாழ்வில் கோபத்தினால் பலரது வாழ்வு கேள்விக்குறியாக மாற்றம் பெறுகிறது. பெரும்பாலும் கோப உணர்ச்சியைத் தனக்குக் கீழுள்ள மற்ற மனிதர்களிடம் காட்டுகிறோம். இது போன்று தான் மாமியார் மருமகள் சண்டையும் அமைகிறது. இதற்கு வரதட்சணையும் ஒரு காரணமாகிறது. பெரும்பாலான பெண்களுக்கு வரதட்சணை எனும் காரணத்தினால் திருமணம் நடைபெறாமல் உள்ளது. இதனைப் போன்று வரதட்சணைக் கொடுமைகளும் கரிசல் வட்டார மக்களிடமும் நிலவி வருகிறது. மருமகளின் நகைகளை மாமியார் எண்ணிப் பார்த்தல், எடைபோடுதல் போன்றவை நிகழ்ந்துள்ளது. இதனாலே சண்டைகளும் நிகழ்ந்துள்ளன இதனை.

**கல்யாணமாகி வந்த புதுசில் அவள் சீதனமாகக் கொண்டு வந்த நகைகளையெல்லாம் அவளுக்குப் பூட்டி அழகுபார்ப்பாள் தனம்மாள் எத்தனை வகை நகைகள் அவள் கொண்டு வந்திருந்தாள்! அந்தக் கிராமத்திலேயே யாருக்கும் அத்தனை வகை நகைகள் கிடையாது. பூடி, அலுக்கு, தாழம்பூ, ஒன்னப்பு, முருகு, குருந்தட்டு, பச்சைக்கல். வெத்திலைச் சுரட்டு, மூணுடுக்கு மணி, பவளம், நெத்திச்சுட்டி, பீலி, பில்லணை இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம்.**

***(கி.ராஜநாராயணன்,2008: 236)***

என்ற கதைப் பதிவுகள் வழி மாமியார் தன்னுடைய மருமகளின் நகைகள் என்னவெல்லாம் இருக்கு என்பதைக் காண அத்தனையும் அணிவித்துள்ளாள். இதில் அவளது நகைகளைக் கண்டு பொறாமையும் அடைகிறாள். மாமியார் தன்னைப் பற்றி மருமகள் என்ன சொல்கிறாள், மருமகள் தன்னைப் பற்றி மாமியார் என்ன சொல்கிறாள் என்று போட்டி போட்டுக் கொண்ட இருக்கின்றனர். இதனால் ஒரு சிறிய செயலுக்கும் கூட இருவரும் தன்னைக் குறித்ததாக எண்ணிக் கொண்டு சண்டையிடுகின்றனர். இது வளர்ந்து மிகப் பெரிய சண்டையாக

Vol. 10 Special Issue 3 January 2026
E-ISSN: 2456-5571

உருவெடுக்கிறது. இதனை அறிந்து கொள்ளும் விதமாக தனம்மா, நவனீது ஆகிய பாத்திரங்கள் இடம்பெற்றுள்ளன.

> **அந்த லீவின் போது மூணுநாளும் தாயார் தனம்மாவின் சமையல் நவனீதுவுக்கு அமிர்தமாக இருக்கும். மூலையில் உட்கார்ந்திருக்கும் லோகாவுக்கு மனது இருப்புக் கொள்ளாது. படித்துக் கொண்டிருக்கிற வாரப் பத்திரிகையில் கண் இருந்தாலும் காது சமையல் அறையில் இருக்கும் அம்மாவும் பிள்ளையும் என்ன பேசிக் கொள்கிறார்களோ என்று ஓர் ஐயம் என்னதான் காதைத்; தீட்டிக் கொண்டு கேட்டாலும் காற்று சில வார்த்தைகளை அடித்துக் கொண்டு போய்விடும் காற்றுக்கும் கூட இந்த வஞ்சகம் வேண்டாம்**
>
> ***(கி.ராஜநாரயணன், 2008: 236)***

என்ற கதைப்பதிவின் வழி விளக்குகிறது, மாமியாரும் மகனும் பேசும் போது தன்னைப் பற்றி எதுவும் பேசுவார்களோ என்ற எண்ணத்திலே நகர்கிறது. மருமகள் காதுகளைக் கூர்மையாக்கி கவனமாகக் கேட்கிறாள் என்பதைக் கண்டறியும் தன்மையில் லோகாவின் எண்ணம் இருக்கிறது.

புதிய உறவுகள் வழி மாமியார் மருமகள் உறவு இணையும் என்பதற்குச் சான்றாக பந்தம் கதையில் வரும் பார்வதியும் அவனது அத்தை ஆகிய இரண்டு கதைமாந்தர்களும் விளங்குகின்றனர். புரிதல் இல்லாது சண்டையிட்டு பிரிந்துவிடுகின்றனர். இவர்களுக்கு இணைப்புப் பாலமாக விளங்குவது ஒரு புதிய உறவு. தனது மகன் வழிப் பேரனை தன் குடும்பத்திற்கான அடுத்த தலைமுறை என எண்ணுகின்றனர்.

இதுகிழட்டுப் பாம்பு காலைச் சுத்துன சனியன் கடித்துக் கொள்ளாமல் விடாது என்றெல்லாம் சண்டையிட்ட மருமகளினை மீண்டும் பார்த்து தன் மகன் வழிப்பேரனை "ஏ..ராசா..ஏந்தங்கபெட்டி... எம்பொண்ணு ரதம்... ஏங்கண்ண" என அடுக்கடுக்கான கொஞ்சல்மொழியில் புகழ்கிறாள். இவ்வாறு புதிய உறவின் வழி இழந்த உறவும் மீண்டும் இணையும் என்பதை அறியமுடிகின்றது.

**தாய் - மகன் உறவு**

பெண்களின் பெருமைகளைப் பறைசாற்றும் உறவாகாத் தாய் உறவுநிலை அமைகிறது. தாய் எனும் உறவுநிலை அன்பிற்கான உறவுநிலையாகும். தாய்க்கு எத்தனை பெண் குழந்தைகள் இருப்பினும் ஆண்குழந்தைகளுக்கு மட்டுமே தனிச்சிறப்பு தருவாள். தாய்க்கு மகனும், தந்தைக்கு மகளும்தான் உயர்வு. இப்படியாக தாய் மகன்களை உயர்வாகக் கருதிவளர்த்தாலும் குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு ஒரு சில ஆண் குழந்தைகள் பணம் அல்லது தன்மனைவி என்ற இருநிலை மட்டுமே அவசியம் என்று தாயைத் தவிக்கவிட்டுச் செல்கின்றனர். இதனை விளக்கும் விதமாக காய்ச்சமரம், உண்மை, பாரததேவி ஆகிய கதைகள் அமைந்துள்ளன. தன் தாயைவிடப் பணம் தான் அவசியம் என்று வாழும் மகன்களாக காய்ச்சமரம் கதையில் வரும் ஆண்பிள்ளைகள் திகழ்கின்றனர்.இதனை

> **பெத்த பிள்ளைகள்ளாம் கல்லுப் போல இருந்தும் அநாதயா ஆயிட்டனேன்னு அழுதா பேரக்கா**
>
> ***(கி.ராஜநாரயணன், 2008: 466)***

எனும் சான்று குறிப்பிடுகிறது.நான்கு ஆண்குழந்தைகள் பெற்று வளர்த்து பங்கு பிரித்துக் கொடுத்த பின்பு யாரும் கண்டுக்கவில்லை நான் அனாதையாக இருக்கிறேன் என்று வார்த்தையின் வழி அவள் தன் மனதில் உள்ள தனிமை உணர்வினை வெளிப்படுத்துகிறாள்.

> **ஊத்தெ வாய்க்கு ஒரு வெத்திலைக்கும் பஞ்சமாய் போச்சேன்று சொல்லி கண்ணீர் விட்டா பேரக்கா**
>
> ***(கி.ராஜநாரயணன், 2008: 466)***

தன்னுடைய வாழ்வில் தொடர்ந்து மேற்கொண்டு வந்த இன்பஉணர்வுகள் ஒவ்வொன்றாக விட்டுவிட்டு கடைசியில் ஊரைவிட்டே வெளியேறிவிடும் நிலை வந்துவிட்டது என்பதை கதை நிகழ்வுகள் வழி அறியமுடிகிறது.

> **பெத்த மனம் பித்து பிள்ளை மனம் கல்லு" என்ற பழமொழிக்கு இணங்க இத்தனை கொடுமைகளையும் தன் பிள்ளைகளுக்காக ஏற்றுக் கொண்ட பேரக்கா கதை முடிவில்,**
>
> **பேரக்கா மட்டும் வாயெத் திறந்து ஒரு வார்த்தெ கேட்டா... ஏம் பிள்ளெக எல்லோரும் நல்லா இருக்காகளா?**
>
> ***(கி.ராஜநாரயணன்,2008: 470)***

என்று கேட்பது உறவின் வலிமையை உணர்த்துவதாக அமைகின்றது. தான் பெற்ற பிள்ளைகள் தன்னைக் கோயில் வாசலில் பிச்சை எடுக்க வைத்துவிட்டது என்ற விரக்தியும் இல்லை, கோபமும் இல்லை. எவ்வளவுதான் பிள்ளைகள் தனக்குத் துன்பம் செய்தாலும் தன்னை அநாதையாக்கினாலும் தாய் மனதில் பாசம் நிலைத்து நிற்கும் என்பதற்கு பேரக்கா சான்றாக விளங்குகிறாள்.

**உண்மை** கதையில் தாய் மகன் உறவில் மிகுந்த மாறுபாடு காணப்படுகிறது. பெற்ற தாய்க்கு ஒரு வேளை சோறு போட பஞ்சாயத்தில் முடிவு செய்யும் மகனைக் கதை மாந்தரமாகக் கொண்டு உண்மைக் கதை விளங்குகிறது. தன்னைப் பெற்று வளர்த்துத் திருமணம் செய்து வைத்த பின்பு அதாவது தாரம் வந்த பிறகு தாய் வேண்டாதவளாக மாறிவிடுகிறாள். இதனை,

> **அண்ணெ யோகக்காரன் பாட்டி சீக்கிரமா செத்துப் போயிட்டா. நா இவளுக்கு காலமெல்லாங் கஞ்சி ஊத்த வேண்டியிருக்குண்ணு இளையவன் சொல்லி ஊர்ப் பஞ்சாயத்தைக் கூட்டினான். பஞ்சாயத்து பைசல் பண்ணிட்டுப் போய்ட்டது.**
>
> ***(கி.ராஜநாரயணன், 2008: 408)***

Vol. 10 Special Issue 3 January 2026
E-ISSN: 2456-5571

எனும் சான்று சுட்டுகிறது .தாய்க்கு ஒரு வேளை உணவு கொடுக்க பஞ்சாயத்துக்கூட்டி முடிவு செய்ய வேண்டியுள்ளது. தாயின் இந்தநிலையினை எண்ணி அவள் வருந்தி அழுகிறாள்.இதை

**நா அந்தக் காலத்திலெ எலும்பொடிய எப்படியெல்லாம் பாடுபட்டெடன் இந்தக் குடும்பத்துக்குண்ணு சொல்லிட்டு அழுதாள்.**

***(கி.ராஜநாரயணன், 2008: 407)***

என்ற கதைப்பதிவு கூறுகிறது.தன்னுடைய பழைய கால வாழ்க்கையினை எண்ணியும் தற்போது உள்ள நிலையினை நினைத்து நாள்தோறும் அழுகிறாள், புலம்புகிறாள். மகன் தன் தாயினை ஓர் உயிராகப் பார்க்கவில்லை. பொருளாதாரமாகப் பார்க்கிறான். அவள் தைரியமாக இருக்கும் போது காட்டு வேலைகளுக்குப் பயன்படுத்திக் கொண்டான். தற்போது வயதாகிவிட்டது அதனால் குழப்பமும் சண்டையும் ஏற்படுகிறது. கரிசல் வட்டார மக்களிடையே ஒரு சில இடங்களில் தான் அன்பும், பாசமும் இணைந்து நிலைத்து உள்ளது. பெரும்பாலான இடங்களில் பொருளாதாரத் தேவைதான் அதிகம் உள்ளது என்பதைப் பல்வேறு கதைகள் வழி அறியமுடிகிறது.

**தந்தை – மகள் உறவு**

பெண் குழந்தையாக இருந்தால் தந்தை மீது மிகுந்த பாசம் கொண்டு வளரும். தந்தையும் தன் பெண் குழந்தையின் மீது எப்போதும் அன்பைச் செலுத்தி மகிழ்வார். தன் மகளுக்கு அடுத்தநிலையில்தான் மனைவி என்ற பாசமும் சில வீடுகளில் நிகழ்வது உண்டு. அதைப்போல் மகன்கள் எத்தனைபேர் இருந்தாலும் தந்தைக்கு மகள்தான் விருப்பம். இதனை “அப்பா பிள்ளை” என்ற சிறுகதையின் வழியாக அறியமுடிகிறது. வேலைக்குச் சென்று வீடுதிரும்பும் போது சண்டையிட்டுக் கொண்டிருந்த குழந்தையின் அப்பா பிள்ளையாக வளரக் கூடிய பெண்குழந்தையை யார் அடித்தாலும் அவர்களுக்குத் தந்தையிடம் அடி உண்டு என்பதை,

**பயபிள்ளை ஏம்பிள்ளையெ அடிக்கிற என்று அப்பா கை ஓங்கிக் கொண்டு வருவார். காது கொடுத்துக் கேட்க முடியாத வார்த்தைகளுடன் வசவுகளும் அடியும் அப்பாவிடம் கிடைக்கும்.**

***(கி.ராஜநாரயணன், 2008: 289)***

எனும் சான்று குறிப்பிடுகிறது.இக்கதை நிகழ்வின் வழி பெண் குழந்தைக்குத் தந்தையிடம் கிடைக்கும் சலுகைகளையும் அறியமுடிகிறது. இரவில் தூங்கும் போதும் தன் தந்தையின் அருகில்தான் உறங்குகின்றார். தந்தையை விட்டுப் பிரிந்து உறங்குவதில்லை.

**ராத்திரிஆயிட்டா பொட்டி அப்பாவுக்குப் பக்கத்திலே படுத்துக்குவா அப்பாக்கு பாலு ஊத்தின காபி அவளுக்கும் பாலு ஊத்தின காபி எனக்கு கடுங்காப்பி தான்.**

***(கி.ராஜநாரயணன், 2008: 290)***

எனும் சான்று சுட்டுகிறது இரவில் உறங்குவது மட்டுமின்றி தந்தைக்கு குடும்பத்தில் வழங்கும் முக்கியத்துவத்தை தந்தை தன் பெண் குழந்தைக்குத் தருகிறார். இதனை இப்பதிவுகள் விளக்குகின்றன. கிராமங்களில் குழந்தைகளை கொஞ்சும் போது ஒருவரை உயர்த்தியும் மற்றொருவரைத் தாழ்த்தியும் பேசுவதைக் கதைவரிகள் புலப்படுத்துகின்றது.

**பொட்டியை அப்பா கொஞ்சும் போது பொட்டிதாம் ஏப்புள்ளே இந்த மூத்தவனை சந்தையிலே தவிடுக்கில்லா வாங்கினது என்று சிறுபிள்ளையிலிருந்தே அப்பா கூறுவார்.**

***(கி.ராஜநாரயணன்,2008: 290)***

மேற்சுட்டிய சான்று ஒரு குழந்தையை உயர்த்தி மற்றொரு குழந்தையை தவிட்டிற்கு நிகராகக் குறைத்துக் கொஞ்சுகிறார். தந்தை மகள் உறவுநிலையில் தந்தைக்கு அடுத்தநிலையில் மகள் தான் குடும்பத்தில் சிறப்புப் பெறுகிறாள். அதிகாரம் பெறுகிறாள். ஒரு சில குடும்பங்களில் தந்தை மகள் உறவுநிலை நண்பர்களைப் போல இருக்கின்ற தன்மையையும் அறியமுடிகிறது.

**அண்ணன் - தம்பி உறவு**

கரிசல் கதைகளில் அண்ணன் தம்பி உறவு மிக முக்கியமான உறவாகக் கருதப்படுகிறது. பெரியவர்களாக மாறியவுடன் அவர்களுக்குள் பங்காளிச் சண்டை ஏற்படுகின்றது. “பத்து வயதுக்கு மேல பங்காளி” என்ற பழமொழிக்கு ஏற்ப அண்ணன் தம்பி உறவுகளில் பலரது வாழ்வில் பொருளாதாரமே முதன்மை பெறுகிறது. சொத்துக்களும் பணமும் தான் உறவாக மாறிவிடுகின்றன. இதனை “உண்மை” மற்றும் “இவர்களைப் பிரித்தது…” ஆகிய கதைகளின் வழி அறியமுடிகிறது.

உண்மை சிறுகதையில் அண்ணன் நோயாளி படுத்த படுக்கையாகத் தன் பொழுதையும் காலத்தையும் கழிக்கக் கூடியவன். அவனிடம் தம்பி சண்டையிட்டு ஊர்ப்பஞ்சாயத்தினைக் கூட்டிச் சொத்துக்களைப் பிரித்துக் கொண்டான். அண்ணன் உடல்நலம் குறைவானவன் என்ற எண்ணம் சிறிதும் இல்லாமல் சொத்துக்களைப் பிரித்ததும் இடையூறு செய்ய ஆரம்பிக்கிறான். இதனை,

**பாகவஸ்தி முடிஞ்ச மறுநாளே ஊடுசுவர் வைக்க தம்பி ஏற்பாடு பண்ணனது மூத்தவனுக்கு மனசு சங்கடமாயிருந்தது. ஊடாலே ஒருவாசலு இருக்கட்டும்; குடும்பத்துலெ நாளைக்கு ஒரு நல்லது பொல்லதுகளுக்குப் பொழங்கிக்கிட தோதாக இருக்கும் என்றான் பெரியவன். சின்னவனும் பெஞ்சாதியும் கூடாதுண்ணு சொல்லிட்டாங்க. அந்தப் பேச்சே கூடாதுன்று சொல்லி பூரணமா அடைச்சாச்சி, இப்பொதெருவச்சுத்தித்தான் போகணும் யார்வீட்டுக்குப் போகனுமிண்ணாலும்.**

***(கி.ராஜநாரயணன்,2008: 406)***

Vol. 10 Special Issue 3 January 2026
E-ISSN: 2456-5571

என்ற கதை நிகழ்வு விளக்குகிறது. தன்னுடைய அண்ணன் தான் என்ற ஒரு பாச உணர்வு இல்லாமல் வழியினை அடைத்து தெருவைச் சுற்றி செல்லுமாறு செய்துவிட்டான் தம்பி. அண்ணன் - தம்பி உறவுநிலையில் விரிசல் ஏற்படுகிறது மேலும்,

> **அம்மா தம்பிய மட்டும்தான் பெத்தாளா அண்ணனை பெறலையா? நானே தான் கஞ்சி ஊத்தணும்னு வேதாவிதியர் அங்கெ ஆறுமாசம், இங்கெ ஆறுமாசம் இருக்கட்டும் ஊர் பஞ்சாயத்து வச்சான் தம்பி.**
>
> ***(கி.ராஜநாரயணன்,2008: 407)***

என்ற கதைப் பதிவு விளக்குகிறது. பெற்ற தாய்க்குச் சோறு போடச் சண்டையிட்டு பஞ்சாயத்தினைக் கூட்டி முடிவு செய்கிறான் தம்பி. அண்ணன் படுத்தபடுக்கையாக இருக்கிறான். அவனுக்கே ஒருத்தர் பணி செய்ய வேண்டும் என்ற சூழலை மறந்து பெற்ற தாய்க்குச் சோறு போடச் சண்டையிட்டு பஞ்சாயத்து வைக்கிறான். பாகப்பிரிவினைக்குப் பின்பு எல்லாமே கணக்குதான் அளவுதான் என்பதாக கதை நகர்வதை அறியமுடிகிறது.

இவர்களைப் பிரித்தது...? என்ற கதையில் கதைத் தொடக்கத்தில் ராம லெட்சுமணன் பரத சத்துருக்கன் போல அண்ணன் தம்பிகள் அவ்வளவு இணக்கமாக வாழ்கின்றனர். அவர்களுக்குள்ளும் அவர்களது மனைவிகளுக்குள்ளும் எந்த பிரிவும் மனஸ்தாபமும் இல்லை. நாட்கள் பல நகர்ந்தது வந்தது குழப்பம் வந்தது குடும்பம்பிரிந்தது வீட்டின் குறுக்கே மண்சுவர் எழுந்தது அதுவே பிரிவின் முதல் துவக்கம் அடுத்தபடியாக நிலப்பிரிவு.இதனை

> **பூர்வீக நிலம் எட்டு ஏக்கர் கரிசக்காட்டை குடும்பத்துக்கு ரண்டு ஏக்கர் வீதம் பாகஸ்வதி செய்து கொண்டனர்.**
>
> ***(கி.ராஜநாரயணன்,2008: 385)***

எனும் கதைச் சான்று சுட்டுகிறது பாகப்பிரிவினை பெரும் குழப்பத்தை உண்டாக்குகிறது. இதன்வழித் தோன்றக் கூடிய பொருளாதாரச் சிக்கல்கள்; அனைத்திற்கும் காரணமாகின்றது வீட்டின் குறுக்கே சுவர்கள் எழுந்தன்

> **இந்தச் சுவர்கள் வைத்த மூகூர்த்தமோ என்னவோ, சகோதரக் குடும்பங்களுக்குள் பேச்சு வார்த்தைகளும் இல்லை அவர்களுக்கிடையே ஒரு சையோத்தியமும் இல்லை.**
>
> ***(கி.ராஜநாரயணன்,2008: 386)***

எனும் கூற்று இதனை விளக்குகிறது இவ்வாறாகக் குடும்பங்கள் பிரிந்து கடைசியில் தெருவில் இறங்கி இவர்களது மனைவிகள் சண்டையிடும் நிலைக்கு மாறிவிட்டதைக் கதைத் தொடக்கம் குறிப்பிடுகிறது.

> **பொட்டச்சிகளுக்குள்ளே ஒரு நா ஒரு பொழுது கூட வாய்ச் சத்தம் வந்தது கிடையாது. அப்படியே மீறி வந்தாலும் அந்த ஆம்பிள்ளைகளின் ஒரு திரட்டு முழியிலெ அடங்கிப்போகும்.**
>
> ***(கி.ராஜநாரயணன்,2008: 385)***

என்ற கதைப் பகுதியின் வழி குடும்ப ஒற்றுமையினைக் கூறுகின்றனர். இறுதியில் தெருவில் சண்டையிடும் பெண்களை யாரும் அடக்கவில்லை அந்த அளவிற்கு அண்ணன் தம்பி பாசஉறவுகள் மாறிவிட்டது. பொருளாதாரமும் பணமும் தான் காரணம் என்பது கதையின் வழி புரிகிறது. சண்டையினைத் தடுக்கும் நிலையில் கூட இந்தக் குடும்பத்தில் இப்பொழுது ஆண்கள் இல்லை என்பதை,

> **இப்பொழுது இந்த சத்தக் குரல் அவர்களுக்கும் கேட்கத்தான் செய்தது. ஆனால் ஏனோ அவர்களால் ஒன்றும் செய்யத் தோன்றவில்லை. இது நீடிக்கட்டும் என்று காத்திருப்பது போலவும், முற்றினால் தாங்களும் பாய்ந்து கலந்து கொள்ளவேண்டும் என்று ஒரு துடி இருப்பது போலவும் தெரிந்தது.**
>
> ***(கி.ராஜநாரயணன்,2008: 389)***

எனும் கதைச் சான்று நிறுவுகிறது. பாகப்பிரிவினை உறவுகளை வெறுக்கத்தான் செய்கிறது. மேலும் பல குடும்பங்களை பிரிந்து வாழச் செய்கிறது. இவற்றைக் கி.ராவின் கதைகள் வழிக் காணமுடிகிறது.

**அக்கா தங்கை உறவு**

அக்கா – தங்கை என்றால் அவர்களுக்குள் அடிக்கடி சண்டை ஏற்படும். பேராசையே இருப்பினும் எந்த ஒரு சூழலிலும் அக்கா – தங்கையையோ, தங்கை – அக்காவையோ விட்டுக் கொடுக்கமாட்டாள். பாசத்தின் வெளிப்பாடாய் ஒரு துளிக் கண்ணீர் பேசும் அதன்வழி அக்கா – தங்கை உறவு மீண்டும் இணையும். இதனை வெளிப்படுத்தும் விதமாக பல சிறுகதைகள் அமைந்துள்ளது. தங்கையின் கணவன் இறந்த பின்பு அவளுக்குத் தேவையான போது உதவிகளைச் செய்வது அக்கா தான் என்பதை இக்கதை விளக்குகிறது. ஊர்த்திருவிழா புதுத்துணி எடுக்க, ஊர்வரிக் கொடுக்க பணம் இல்லாது தவிக்கும் தங்கைக்கு அக்காதான் தகுந்த நேரத்தில் உதவுகிறாள்.

> **பூவனம் ஒரு யோசனையோடு அக்கா வீட்டுக்குப் போனாள். அக்காட்டயாச்சும் மச்சானிடமாச்சும் கடனாக் கேட்டுப் பார்க்கலாம். என்ன செய்வது, இவர்களை விட்டால் வேறு சொந்த பந்தம் கிடையாதே... வேற நாதியில்லே...**
>
> ***(கி.ராஜநாரயணன்:2008: 112)***

எனும் சான்று குறிப்பிடுகின்றது.

தன் அக்காவின் வீட்டிலே சென்று கடனாவது கேட்கலாம் என்ற முடிவில் செல்கிறாள். இதற்கு முன்னரே அங்கே அக்கா துணியை எடுத்து வைத்துத் தன் கணவனிடம் தன் தங்கையைப் பற்றி பேசிக்கொண்டு இருக்கிறாள்.

> **அவளுக்கும் நம்மை விட்டா வேற யார் இருக்காக? இந்த சின்னவயசுலே தாலியறுத்துட்டு நிக்குற அவளைப் பாக்குறப்போ... நமக்கும் சங்கடமாயிருக்கு... எந்தங்கச்சிக்கும், புள்ளைகளுக்கும் புதுத்துணி எடுத்தேன் கொண்டு போயிக் குடுக்கனும்.**
>
> ***(கி.ராஜநாரயணன், 2008:119)***

மேற்சுட்டிய சான்றின்வழி தன் கணவனிடம் தங்கையைப் பற்றிப் பேசும் பாசத்தின் நீட்சியை அறிய முடிகிறது. சிறுவயதிலே கணவனை இழந்த தன் தங்கைக்கு தான் மட்டுமே ஆதரவு என்ற உணர்வில் அக்காவின் பாசம் அன்பு வெளிப்படுகிறது. அண்ணன் - தம்பி உறவினை விட அக்கா – தங்கை உறவு பிணைப்பு மிக்கது. பெண் என்ற உணர்வில் இருவரும் ஒரு துளிக் கண்ணீருக்குள் அடங்கிவிடுவர். இவற்றையெல்லாம் கரிசல் கதைகள் தெளிவாக ஆய்வு விளக்கி நிற்கின்றது.

**மாறுபட்ட உறவுமுறை**

உறவுமுறை என்பது தன்னுடைய இரத்த பந்தமோ அல்லது இனபந்தமோ கொண்டு அமையக் கூடியது. இத்தகைய நிலையில் எந்த இரத்தபந்தமும் இல்லாமல், இனபந்தமும் இல்லாமல் தான் இருக்கும் ஊருக்காகவும் ஊரில் உள்ளோருக்காகவும் வாழும் கதைமாந்தர்கள் தான் மாறுபட்ட உறவுநிலையில் அடங்குபவர். இவர்கள் ஊரில் உள்ளவர்கள் எல்லாரும் தம் உறவினர் என்று வாழக்கூடியவர்கள். இதனை விளக்கும் விதமாக "தொண்டு" எனும் கதையில் வரும் காமம்மா என்ற பெயருடைய புள்ளிக்காரி என்னும் கதைப்பாத்திரம் அமைந்துள்ளது. தன் வாழ்வில் பதினாறு நாளில் தன் கணவனை இழந்து தாய் தந்தை இல்லாமல் பிழைக்க வந்த ஊரே உறவு என்று வாழக்கூடியவள். இதனை

> **காமம்மாவிற்கு கொடுத்து வைக்கவே இல்லை; குளத்தில் 'கால்' கழுவப் போனவன் காக்கா வலிப்ப வந்து தண்ணீரில் வீழ்ந்தவன்; செத்தே போனான். கல்யாணம் முடிஞ்சி பதினாறு நாள் தான் அவவாழ்க்கை அவ்வளதான்.. காமம்மா புரட்சிக் கொடி உயர்தினாள். ஊரே திகைத்தது. கண்டாங்கிச் சேலைதான் உடுத்துவேன்; வெள்ளைக்சேலையை உடுத்தவே மாட்டேன் என்று உறுதியாகச் சொல்லிவிட்டாள் ஊரே கலங்கியது.**
>
> ***(கி.ராஜநாரயணன், 2008: 426)***

கதைப்பதிவு விளக்குகிறது.

காமம்மா தன் கணவன் இறந்த பின்பு அந்த ஊரிலே இருந்துவிட்டாள். அதுமட்டுமில்லை வெள்ளைச் சீலையை உடுத்தவேமாட்டேன் என்று ஊர்முன்னிலையில் சொல்லிவிட்டாள். அவளுக்குச் சொந்தம் என்று சொல்லிக் கொள்ள யாரும் இல்லை. ஆனால் காமம்மா ஊரில் உள்ளவர்களை சித்தப்பா, மாமா, தம்பி, அக்கா, மதினி என்று தானாக முறை சொல்லி அழைத்துக் கொள்வாள். காமம்மா யார் வீட்டில் எந்நிகழ்வு நிகழ்ந்தாலும் யாரும் சொல்லாமலே வேலைகளை இழுத்துப் போட்டுக் கொண்டு செய்யக் கூடியவள். அதற்கு ஊர்க்காரர்கள் தரும் பரிசு முன்னே விட்டு பின்னே பொறணி பேசுவது என்பதை,

> **ஊரில் எந்த வீட்டில் எது நடந்தாலும் காமம்மா முதல் ஆளாக நிற்பாள். அங்கே உள்ள கடினமான வேலையைத் தன்பொறுப்பில் எடுத்துக் கொண்டு மாடாய் உழைப்பாள். அவளிடம் நன்றாக வேலை வாங்கிவிட்டு அவள் தலை மறைந்தவுடன் குற்றக் கேடாகப் பேசி மகிழ்வார்கள் மோசமாகத் திட்டுவார்கள் படுக்காளிச் சிறுக்கி, இவ வல்லைன்னு இங்கு யாரு அழுதா? என்பார்கள்.**
>
> ***(கி.ராஜநாரயணன், 2008: 402)***

எனும் கதைச்சான்று குறிப்பிடுகின்றது.

எந்த இடத்திலும் யாரிடமும் காமம்மாள் சண்டையிட்டாள் என்ற செய்தி வந்தது இல்லை. இந்தச் சமூகம் தன்னை மாறுபட்டநிலையில் பார்க்கிறது. தன் முதுக்குக்குப் பின்னால் பொறணி பேசுகின்றது என்பதெல்லாம் தெரியும். இருந்தும் எதற்கும் கலங்காமல் நிற்கிறாள். இதுமட்டுமின்றி ஊரில் உள்ள இளைஞர்கள் முதல் முதியவர் வரை அனைவரும் காமம்மாவிற்கு கடமைப்பட்டவர்கள் எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாமல் வாழக் கூடியவள். இதனை,

> **ஊரிலுள்ள இளவட்டங்கள் மட்டுமல்ல புகல் கிடைக்காத வயசாளிகள் வரை காமுவுக்கு கடமைப்பட்டவர்கள் தான். இதற்காக அவளை வேசி என்று யாராலும் சொல்ல முடியாது. பலனை எதிர்பாராத பரோபகாரமாத்தான் அவள் நடந்து கொண்டாள். வயிறு குளிர்ந்தது போலவே மனசும் குளிர்ந்து அவளிடமிருந்து திரும்புவார்கள். ஊர்ப்பெண்டுகள் போல ஆண்களும் அவளை ஒரு பைத்தியக்காரி என்றும் பொகல் கெட்டவள் என்றும்தான் நினைத்தார்கள்.**
>
> ***(கி.ராஜநாரயணன், 2008: 426)***

எனும் கதைப் பதிவு குறிப்பிடுகின்றது.

தன் வாழ்க்கையை ஊருக்காகக் கொடுத்த காமம்மா காசு வாங்கியிருந்தால், பணத்தைப் பெற்று காடுகரைகளை எழுதி வாங்கியிருந்தால் அவளை இப்படி எண்ணமாட்டார்கள். அவள் அனைவரிடமும் இயல்பாக இருந்தாள். ஒரு சில இளைஞர்களுக்கு புத்தி சொல்லியும் வாழ்ந்து வந்தாள். இதனை

> **இளவெட்டங்களுக்கு புத்தி சொல்லுவாள் சரி தம்பியாபுள்ள போ, போயி காலகாலத்துல ஒரு கலியாணத்த முடி; இப்பிடி அலையாதே பெரிய குடும்பத்துப் பிள்ளைக்கு இது அளகில்ல கிளம்பு.**
>
> ***(கி.ராஜநாரயணன், 2008: 389)***

எனும் கதைச் சான்று விளக்குகின்றது.

எல்லாருக்கும் பொதுவாக வாழந்த காமம்மா, இந்த ஊர்க்காரர்கள் இவளிடம் வந்து உதவி என்று கேட்டு வந்தபோது வாரி வழங்கியுள்ளாள். அப்போதெல்லாம் இவள் மனதுக்குள்ளே ஓர் உயர்ந்த எண்ணம் தன்னையும் நாடி உதவி வேண்டிவருகிறார்காளே என்ற மகிழ்வில் மயங்குகிறாள். இதனை

> **சரி சித்தப்பா கவலையை விடுங்க நானாச்சி இது நம்ம ஊருக்காக நா இதக் கூடச் செய்யலைன்னா இருந்து நான் என்னத்துக்கு; என்றாள் உணர்ச்சியுடன். இந்த வினாடியில் காமம்மாவுக்கு தான் ஒரு தேவதையின் சிலையாக உயர்ந்து நிற்பதாகப்பட்டது.**
>
> ***(கி.ராஜநாரயணன், 2008: 431)***

எனும் கதைப்பதிவு விளக்குகிறது.

தான் வாழும் இந்த ஊருக்காகத் தன்னையும் தன்உயிரையும் கொடுக்கத் துணிந்தவள். ஊரில் யாரும் இரத்த உறவோ இனஉறவோ, பெண் கொடுத்த, பெண் எடுத்த வழி உறவோ இல்லை இருப்பினும் ஊரே தன் உறவு நிலையாகக் கொண்டு வாழ்கிறாள் என்பதைக் கதை நிகழ்வின் வழி அறியமுடிகிறது.

**நிறைவுரை**

குடும்ப அமைப்பில் இணைந்து பல உறவுமுறைகளை பெறுவதற்கு காரணியாக இருப்பது திருமணம் என்பதாகும்.இல்வாழ்க்கைத் தொடக்கம் திருமணம் எனும் நிகழ்வால் அமைகிறது என்பதை சிறுகதைகள் உணர்த்துகிறது. பல்வேறு உணர்ச்சிகள் கலந்த வாழ்வில் கோபத்தினால் பலரது வாழ்வு கேள்விக்குறியாக மாற்றம் பெறுகிறது. பெரும்பாலும் கோப உணர்ச்சியைத் தனக்குக் கீழுள்ள மற்ற மனிதர்களிடம் காட்டுகிறோம் என்பதை கி.ரா சிறுகதைகள் உணர்த்துகிறது. உறவுமுறை என்பது தன்னுடைய இரத்த பந்தமோ அல்லது இனபந்தமோ கொண்டு அமையக் கூடியது. இத்தகைய நிலையில் எந்த இரத்தபந்தமும் இல்லாமல், இனபந்தமும் இல்லாமல் தான் இருக்கும் ஊருக்காகவும் ஊரில் உள்ளோருக்காகவும் வாழும் கதைமாந்தர்கள் தான் மாறுபட்ட உறவுநிலையில் அடங்குபவர் இவற்றை சிறுகதை வழி அறிய முடிகிறது.

**சான்றாதாரங்கள்:**

1. கி.ராஜநாராயணன் கதைகள் (முழுத்தொகுப்பு), அன்னம் - அகரம் பதிப்பகம், 2008.
2. கு.வெ.பாலசுப்பிரமணியன், சங்க இலக்கியத்தில் சமூக அமைப்புகள், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1990-முதற்பதிப்பு.
3. கி.ராஜநாராயணன், பெண்கதை எனும் பெருங்கதை, அன்னம் வெளியீடு.